**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 487/2024**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : தனுஷ் | Caste | : |
| Father Name | :ரெங்கசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(08.07.2025)**
**முதல் விசாரணை**

நான் கட்ராம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பொறியியல் 2ம் ஆண்டு படித்து வருகிறேன். கடந்த 08.08.2024 அன்று காலை 6.05 மணிக்கு ராஜபாளையம் டு திருமங்கலம் ரோட்டில் உள்ள ஆலம்பட்டி பழைய ஆர்டி.ஓ., அலுவலகம் அருகே கட்ராம்பட்டியில் இருந்து திருமங்கலத்திற்கு உடற்பயிற்சி செய்வதற்காக எனது அப்பாவுக்கு சொந்தமான டிஎன் 58 பி,இசட்.9421 என்ற பேஸன் புரோ என்ற இருசக்கர வாகனத்தில் நான் வந்துகொண்டிருந்த போது எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் நான் செல்லும் வழியை மறித்து எனது வண்டி சாவியை பிடுங்கி கொண்டு என்னையும் கீழே இறங்கி சொல்லி எனது மேற்கண்ட இருசக்கர வாகனத்தை பறித்துகொண்டு சென்றுவிட்டார்கள். சம்பவயிடத்தில் இருந்தே எனது அப்பா ரெங்கசாமிக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அப்பா சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தார். பின்பு நாங்கள் திருமங்கலம் காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரை நான் எழுதினேன். நான் புகார் கொடுத்து 2 வாரங்கள் கழித்து போலிசார் எனது இருசக்கர வாகனத்தை

கண்டுபிடித்து கொடுத்தார்கள். எனது இருசக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக்கொண்டேன். என்னிடம் புகைப்படத்தில் காண்பிக்கப்படும் இருசக்கர வாகனம் தான் காணாமல் போன எனது இருசக்கர வாகனம் ஆகும். மேற்படி வாகனம் உள்ள புகைப்படம் மொத்த எண்ணிக்கை–2 சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் இருசக்கர வாகனத்தை பறித்தவர்களில் ஒருவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். மற்றொருவரை பார்த்தாலும் நான் அடையாளம் காட்டுவேன் (அவரது இறப்பு சான்று நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு அவருக்கு எதிரான குற்றச்சாட்டு முடிக்கப்பட்டுள்ளது (Abated). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது பிறந்த தேதி 20.04.2006 ஆகும். நான் கட்ராம்பட்டியில் இருந்து திருமங்கலம் வந்தேன். இடையில் வண்டியை நிப்பாட்டவில்லை. எதிரிகள் எனக்கு பின்னால் வந்ததாக நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். 23.08.2024 அன்று போலிசார் எதிரியை நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காட்டினார்கள் என்றால் சரிதான். போலிசார் நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காட்டியதை தான் இன்றும் நான் எதிரியை பார்த்து அடையாளம் சொல்கிறேன் என்றால் சரிதான். வண்டியை பிடுங்கியதாக சொல்லும் நேரத்தில் அங்கு வேறு நபர்கள் யாரும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் டெடி எக்ஸ்போர்ட்ஸ் கம்பெனி உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அங்கு இளநீர் கடை உள்ளதா என்றால் கொஞ்சம் தள்ளி உள்ளது. திருமங்கலத்தில் உள்ள ராயல் பிட்னஸ் என்ற உடற்பயிற்சி கூடத்திற்கு நான் வருவேன். சம்பவம் நடந்த இடத்தில் என் அப்பா வரும் வரை நான் மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தேன். எனது அப்பா 10 நிமிடத்தில் அங்கு வந்துவிட்டார். எனது அப்பா வந்தவுடன் நாங்கள் காவல் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிட்டோம். புகார் அப்பொழுதே கொடுத்துவிட்டோம். மதியம் 2.30 மணிக்கு தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் காலையிலேயே கொடுத்துவிட்டேன். எதிரிகள் எந்த பக்கம் இருந்து வந்தார்கள், எந்த பக்கம் போனார்கள் என்ற விபரத்தை புகாரில் நான் எழுதவில்லை. எதிரிகள் குறித்து

எவ்வித அடையாளங்களும் சொல்லி நான் புகார் எழுதவில்லை. நான் உடற்பயிற்சி செய்யும் இடத்திற்கு எதிரில் திவ்யா மீனா என்ற இருசக்கர வாகன காப்பகம் உள்ளது என்றால் உள்ளது. அந்த திவ்யா மீனா இருசக்கர வாகன காப்பகத்தில் உள்ளவர்கள் எனது வண்டி ரோட்டில் நின்று கொண்டிருந்ததால் யாருடைய வண்டி என்று தெரியாமல் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு சென்று நான் எனது இருசக்கர வாகனத்தை பார்த்தேன் என்றால் நான் பார்க்கவில்லை. எனது அப்பாவுக்கு  தான் பார்த்த இடம் தெரியும். என்னிடம் காட்டப்பட்ட சா.பொ.1 எங்கு வைத்து எடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது.  சம்பவத்திற்கு பிறகு சா.பொ.1 ல் உள்ள வாகனத்தை நான் பார்க்கவில்லை. எனது அப்பா தான் வீட்டிற்கு எடுத்துவந்தார் என்றால் சரிதான். எனது வண்டியை இருசக்கர வாகன காப்பாளர்கள் எடுத்துக்கொண்டு காவல் நிலையத்தில் ஒப்படைத்ததை கேட்கப்போன போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க நபர்களை குறிப்பிட்டு நான் புகார் தந்தேன் என்றாலும் நீதிமன்றத்தில் வைத்தே போலிசார் அடையாளம் காட்டியதற்கு இனங்க எதிரிகள் தான் குற்றம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரிக்கும் எனது வாகன திருட்டிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 487/2024**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : ரெங்கசாமி | Caste | : |
| Father Name | :பெருமாள் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(08.07.2025)**
**முதல் விசாரணை**

நான் கட்ராம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு போக்குவரத்து கழகம் மேலூர் கிளையில் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். கடந்த 08.08.2024 அன்று காலை 6.10 மணியளவில் எனது மகன் அ.சா.1 எனக்கு போன் செய்து எனது மகன் கட்ராம்பட்டியில் இருந்து திருமங்கலம் ஜிம்மிற்கு உடற்பயிற்சி செய்வதற்காக வருவார். அவ்வாறு மேற்சொன்ன சம்பவதினத்தில் ஆலம்பட்டி அருகே பழைய ஆர்டி.ஓ.அலுவலகம் அருகே டிஎன் 58 பி.இசட்.9421 என்ற பேசன் புரோ இருசக்கர வாகனத்தில் எனது மகன் வந்துகொண்டிருந்த போது 2 நபர்கள் எனது மகனை மிரட்டி அந்த மேற்சொன்ன இருசக்கர வாகனத்தை பறித்து சென்றுவிட்டார்கள் என போனில் தகவல் கூறினார். நானும் எனது அண்ணன் மகன் ரெங்கநாதனும் சம்பவயிடத்திற்கு சென்று அக்கம் பக்கம் விசாரித்தோம். எந்த தகவலும் எங்களுக்கு கிடைக்கவில்லை. எனவே காவல் நிலையம் சம்பவம் பற்றி புகார் கொடுத்தோம். புகாரை எனது மகன் அ.சா.1 புகார் கொடுத்தார். அந்த புகாரில் நான் சாட்சிக் கையெழுத்து போட்டேன். மேற்படி சாட்சிக் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் கொடுத்து சுமார் 15 நாட்கள் கழித்து போலிசார் எனக்கு போன் செய்து காணாமல் போன எனது வண்டி கிடைத்துவிட்டதாக கூறினார்கள். அதை

நான் நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக்கொண்டேன். வண்டியை திருடியவர்கள் விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 487/2024**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ரெங்கநாதன் | Caste | : |
| Father Name | : வரதராஜபெருமாள் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(08.07.2025)**
**முதல் விசாரணை**

நான் கட்ராம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் ஓட்டலில் பணி செய்து வந்தேன். அ.சா.1 எனது சித்தப்பா மகன் ஆவார். அ.சா.2 எனது சித்தப்பா ஆவார். கடந்த 08.08.2024 அன்று காலை 6.10 மணியளவில் அ.சா.1 எனது சித்தப்பா அ.சா.2ற்கு போன் செய்து எனது சித்தப்பா மகன் கட்ராம்பட்டியில் இருந்து திருமங்கலம் ஜிம்மிற்கு உடற்பயிற்சி செய்வதற்காக வருவார். அவ்வாறு மேற்சொன்ன சம்பவதினத்தில் ஆலம்பட்டி அருகே பழைய ஆர்டி.ஓ.அலுவலகம் அருகே டிஎன் 58 பி.இசட்.9421 என்ற பேசன் புரோ இருசக்கர வாகனத்தில் எனது மகன் வந்துகொண்டிருந்த போது 2 நபர்கள் எனது சித்தப்பா மகனை மிரட்டி அந்த மேற்சொன்ன இருசக்கர வாகனத்தை பறித்து சென்றுவிட்டார்கள் என போனில் தகவல் கூறினார். நானும் எனது சித்தப்பா அ.சா.2ம் சம்பவயிடத்திற்கு சென்று அக்கம் பக்கம் விசாரித்தோம். எந்த தகவலும் எங்களுக்கு கிடைக்கவில்லை. எனவே காவல் நிலையம் சம்பவம் பற்றி புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.